09.11.2022. சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை . (ஓ.எஸ்.எண். 178 /2017 ) வா.சா.1. லட்சுமி.

குறுக்குவிசாரணை –

1) எனது தகப்பனாரின் அப்பா பெயர் மாடன் என்றால் சரிதான். எனது அப்பாவுடன் பிறந்தவர்கள் வேறு நபர்கள் இருக்கிறார்களா என்றால் 2 அத்தைகள் இருக்கிறார்கள். எனது தாத்தா மாடனுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களின் மொத்த விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு எனது தகப்பனார் தான் நன்கொடையாக 3 செண்ட் நிலம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு எனது தாத்தா மாடன் 16 செண்ட் கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது எனது தகப்பனார் எங்களிடம் சொன்னன் மூலம் தெரியும். எங்கள் இடத்திற்கு கிழக்கே யாருடைய நிலம் என்றால் வேதக்கோவில் உள்ளது. எங்களது இடத்திற்கு தெற்கே 16 பிரதிவாதியின் இடம் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.46/4 உட்பிரிவு செய்யப்பட்டதில் எங்களுக்குப் பாத்தியப்பட்ட 3 செண்ட் நிலம் எந்த உட்பிரிவில் உள்ளது என்றால் 46/4 சி–ல் உள்ளது. பிரதிவாதியின் இடம் சர்வே எண்.46/4 ஏ–ல் உள்ளது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது.

2) எங்களுக்குப் பாத்தியப்பட்ட சர்வே எண்.46/4 சி–யில் உள்ள நிலத்தில் 08.04.2017 தேதியில் பிரதிவாதிகள் அத்து மீறி நுழைந்து ஆழ்துளை கிணறு அமைத்துள்ளார்கள் என்பது தான் எனது வழக்கு என்றால் சரிதான். இது சம்பந்தமாக மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல்துறையில் யார் புகார் கொடுத்தார் என்றால் எனது தகப்பனார் புகார் கொடுத்தார். ஷை புகார் மனுவின் நகல்களை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நகல் எடுக்காத காரணத்தினால் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய தகப்பனார் கயத்தார் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனுவின் நகல் பிராதுடன் இணைத்து தாக்கல் செய்து ஆவணமாக குறியீடு செய்யாததற்கு ஏதேனும் காரணம் உள்ளதா என்றால் அது பற்றி எனக்குத்தெரியாது. என்னிடம் காட்டப்பட்ட புகார் மனு நகல் எனது தகப்பனாரால் காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். **(அது பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பி.வா.சா.ஆ.1 புகார் மனுவில் பிரச்சனைக்குரிய இடத்தில் உள்ள பனை மரத்தை வெட்டிவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) ஆள்துளை கிணறு பிரதிவாதியால் 1981ல் போடப்பட்டது என்றால் 08.04.2017 ல் தான் போடப்பட்டது. ஆள்துளை கிணறு 1981ல் போடப்பட்ட

காரணத்தினால் தான் பி.வா.சா.ஆ.1 புகாரில் ஷை ஆள்துணை கிணறு பற்றி எனது தகப்பனார் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எங்கள் இடம் அமைந்துள்ள சர்வே எண்.46/4 சி–யின் மொத்த விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 ஆவணம் சர்வே எண்.46/4 சி –க்குரிய கூட்டுப்பட்டா என்றால் சரிதான். ஷை வா.சா.ஆ.2 ஆவணத்தில் எனது தாத்தாவின் வாரிசுகளுடன் 'சி.அன்னாவி' என்ற 3 ம்தரப்பினரின் பெயரும் இடம் பெற்றுள்ளது என்றால் சரிதான். ஷை சர்வே எண்.46/4 சி–யில் உள்ள நிலம்கூட்டுப்பட்டாவில் கண்டுள்ள 5 நபர்களுக்கு எந்த எந்த இடங்கள் என பிரிக்கப்படவில்லை என்றால் சரிதான். எனது தாத்தா தற்போது இருக்கிறா என்றால் இறந்து போனார். எப்போது இறந்து போனார் என்றால் நான் சிறுவயதாக இருக்கும் போதே இறந்து போனார், வருடம் நினைவில்லை.

4) பிரதிவாதி எங்கள் ஊரில் வீடு கட்டி கடைகள் கட்டி வாடகைக்கு விட்டுள்ளார் அது எவ்வளவு நாட்கள் இருக்கும் என்றால் கட்டியுள்ளார் எவ்வளவு காலம் இருக்கும் என்று எனக்குத்தெரியாது. அதில் ஒரு பகுதியை பிரதிவாதி தனது மகளுக்கு தானமாக கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதியின் எதிர்வழக்குரையில் தனக்குப் பாத்தியப்பட்ட நிலத்தின் ஒரு பகுதியை தனது மகளுக்கு தானமாக கொடுத்துவிட்டதாகவும் ஆகவே தனது மகளும் இவ்வழக்கின் அவசியமான தரப்பினர் என்று கட்சி செய்துள்ளார் என்றால் அவர் அவரது 16 செண்ட் நிலத்தில் தானமாக கொடுத்துள்ளார் எங்கள் இடத்தில் தானம் கொடுக்காத காரணத்தினால் அவரை கட்சியாக சேர்க்கவில்லை. நாங்கள் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புக்கு பிரதிவாதி 11.09.2017 அன்று பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அதை நான் படித்துப்பார்த்தேனா என்றால் படித்துப்பார்த்தேன். ஆனால் ஷை பதில்அறிவிப்பை மறைத்து பதில் அனுப்பவில்லை என வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

5) தாவா இடத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டாரா என்றால் பார்வையிட்டார். பிரதிவாதி அமைத்துள்ள ஆள்துளை கிணறு அளவுப்படி சர்வே எண்.46/4 ஏ என்ற பிரதிவாதியின் இடத்தில் தான் வருகிறது என்று நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் எனது வழக்கறிஞர் என்னிடம் கூறினார் எனக்கு சரியாக நினைவில்லை. நீதிமன்ற ஆணையர் பிரதிவாதியிக்கு பாத்தியப்பட்ட 16 செண்ட் நிலத்தை அளவீடு செய்தாரா என்றால்

அளவீடு செய்தார். எங்களுக்குப் பாத்தியப்பட்ட 3 செண்ட் நிலத்தை அளவீடு செய்தாரா என்றால் அதற்குள் பிரச்சனை ஏற்பட்டதால் அளவீடு செய்யவில்லை. நீதிமன்ற ஆணையர் எங்களது இடத்தையும் எங்கள் இடத்திற்கு கிழக்கில் உள்ள நிலத்தையும் அளவீடு செய்தார் என்றாலும் அதை மறைத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6) சர்வே எண்.46/4 சி–யில் உள்ள 3 செண்ட் அளவுடைய நிலத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரியுள்ளோம் என்றால் சரிதான். ஷை நான் விளம்புகை பரிகாரம் கோரியுள்ள 3 செண்ட் அளவுள்ள நிலத்திற்குள் அமைக்கப்பட்டுள்ள ஆள்துளை கிணற்றை அப்புறப்படுத்த வேண்டுமென்று நான் பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட பட்டாவில் அவருக்குப் பாத்தியப்பட்ட 16 செண்ட் நிலத்தை காட்டிலும் கூடுதலாக 3 செண்ட் நிலம் காட்டப்பட்டுள்ளது என்று ஷை கூடுதலான 3 செண்ட் நிலம் எங்களுக்குப் பாத்தியப்பட்டதென கட்சி செய்கிறோம் என்றால் சரிதான். ஷை பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட பட்டாவில் அதிகமாக காட்டப்பட்டுள்ள 3 செண்ட் நிலம் எங்களுக்குப் பாத்தியப்பட்டது இல்லை என்றாலும் வருவாய்துறையினருக்குப் பாத்தியப்பட்ட வேறு நிலம் என்றால் சரியல்ல. சர்வே எண்.46/4 சி–யில் உள்ள 18.5 ஏர் – 46 செண்ட் நிலம் தற்போதும் கிராம புல வரைபடத்தின் படி ஸ்தலத்தில் இருந்து வருகிறது என்றாலும், ஷை சர்வே எண்.46/4 சி– யில் உள்ள எந்த இடத்தையும் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல.

7) சர்வே எண்.46/4 சி–யில் உள்ள நிலத்தின் பிற உரிமையாளர்கள் அவரவரர்கள் இடத்தை அவரவர்கள் தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும் ஆகையால் தான் பிரதிவாதியின் அனுபவத்தை பொறுத்து அவர் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் தபசில் சொத்திற்கு நான்கு மால்கள் விவரத்தில் பிரதிவாதியின் நிலத்திற்கு தெற்கு என குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். எனது தகப்பனார் எங்களுக்கு எழுதிக்கொடுத்த 3 செண்ட் அளவிலான நிலத்தை தற்போதும் நாங்கள் அனுபவம் செய்து வருகிறோம் என்றாலும் தவறான நோக்கத்துடன் இந்த வழக்கை பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே எனது வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் பிரதிவாதியின் மகளான கோமதி என்பவர் அவசிய

தரப்பினர் என்றாலும் அவரை சேர்க்காத காரணத்தினால் எனது வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வே.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
09.11.2021.